பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை (31-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 317

# வெற்றிஉறுதிராணுவநடவடிக்கை: மற்றும் ஒரு படை அணி இணைவு!

## கொழும்பில் மீண்டும் தேடுதல் 50 பேருக்கு மேல் கைது!

கொழும்பு, ஒக். 31

கொழும்பு, குணசிங்கபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகலளை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த படையினர் 50 க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைது செய்தனர்.

பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து சுமார் 4 மணி நேரம் இத்தேடுதலில் ஈடுபட்டனர்.

வீதியில் சென்ற வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மேல் விசாரணைக்காக வாழைத்தோட்டம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். (இ-3)

## துப்பாக்கிச் சூட்டில் செய்தியாளர் காயம்!

### முன்னாள் கான்ஸ்டபிள் தற்கொலை

கொழும்பு, ஒக். 31

துப்பாக்கிச் சூட்டில் செய்தியாளர் ஒருவரும் அவரது மகளும் காயமடைந்தனர். இவர்களைச் சுட்டதாகக் கூறப் படும் முன்னாள் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

நேற்று முன்தினம் இரவு காலியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

திவயின செய்தியாளரான மைக்கல் சிறிவர்த்வன வியனகே என்பவரே காயமடைந்தவராவார்.

காதல் விவகாரம் ஒன்றே இச்சம்பவத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. (இ-5-21)

## வவுனியா, நுவரெலியாவில் சதீஸ்கரனைத் தேடி வேட்டை

கொழும்பு, ஒக். 31

ராகிங் துன்புறுத்தலுக்குள்ளான வரப்பிரகாஷின் மரணம் தொடர்பாகத் தேடப்படும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட இரண்டாம் ஆண்டு மாணவன் சதீஸ்கரன் வவுனியாவில் அல்லது நுவரெலியாவில் மறைந்திருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த இரு இடங்களிலும் இவரைத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் பேராதனைப் பல்கலைக்கழக எல்லைக்குள் எதிர்காலத்தில் ராகிங் செய்வதற்கு தடைவிதிப்பது எனவும் —

மீறிச்செயல்படும் மாணவர்களுக்கு உயர் தண்டனை

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்புக்கு சிறப்புப் படை!

கொழும்பு, ஒக். 31

கொழும்புத் துறைமுகம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சத்தில் அதன் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கடமையில் உள்ள பாதுகாப்புப் படையினருக்குப் பதிலாக சிறப்புப் பயிற்சி பெற்ற படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (இ 5)

## ஐ. தே. கவுடன் பேச்சு நடத்த தமிழ்அரசியல்கட்சிகள்முடிவு

கொழும்பு, ஒக். 31

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு ஐ. தே. கவின் ஆதரவைத் திரட்டுமுகமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று ஐ. தே. க. தலைமைப்பீடத்தை சந்தித்துப் பேசவிருக்கிறது.

அரசுக்கும் ஐ. தே. கவுக்கும் இடையில் இணக்கம் காணப்படாத விடயங்கள் தொடர்பாகவே இந்த பேச்சு இடம்பெறவிருக்கிறது.

ஆட்சியின் வடிவம் ஒற்றையாட்சியா? பிராந்தியங்களின் ஒன்றிய ஆட்சியா? என்பது குறித்தும்—

(8ஆம் பார்க்க பக்கம்)

## பயணிகள் பலாலி வந்தனர்

நேற்று முன்தினம் பலாலிப் பகுதியில் காலநிலை சீரில்லாத காரணத்தால் தரையிறங்காமல் மீண்டும் இரத்மலானைக்கு திரும்பிய 'லயன் எயர்' விமானத்தில் பயணம் செய்த பயணிகள் நேற்றுக் காலை விசேட சேவை மூலம் பலாலிக்கு அழைத்துவரப்பட்டனர். (இ-3)

## அறிக்கைகளை அரசு வெளியிடும்

காணாமற் போனவர்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப் பட்ட ஆணைக் குழுக்களின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி நகர்வுக்கான ஏற்பாடுகள் துரிதம்

கொழும்பு, ஒக்ரோபர் 31

வெற்றிஉறுதி ராணுவ நடவடிக்கையில் மூன்றாவது படை அணி ஒன்றும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது. 56 ஆவது படை அணியே புதிதாக இணைக்கப்பட்ட படை அணி ஆகும்.

ஏற்கனவே 55 ஆவது படை அணியும் 53 ஆவது படை அணியும் இயங்குவது தெரிந்ததே.

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் பூர்த்தி அடைந்த நிலையில் மூன்றாவதும் இறுதியுமான கட்ட நடவடிக்கைக்கான முன் ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக இணைந்துள்ள 56 ஆவது படை அணி 9 ஆயிரம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்துக்குக் கிழக்கே புலிகள்-படையினர்மோதல்

வவுனியா. ஒக். 31

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைத் துருப்பினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த இரு நாள்களாக மாங்குளத்துக்கு கிழக்கே மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன.

இந்த மோதல்களில் 5 விடுதலைப்புலிகள் உறுப்பினர் உயிரிழந்ததாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்த போதும் அது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்தும் தெரியவரவில்லை.

மூன்றாவது கட்ட நடவடிக்கைக்கு முன்னோடியாக படையினர் சில நகர்வுகளை ஆரம்பித்திருப்பதாக நம்பப் படுகிறது.

நெடுங்கேணியில் இருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படையாளிகளுடன் கொழும்புக்குள் புலிகளின் லொறி?

### குண்டுப் புரளியால் நேற்றுப் பதற்றம்

கொழும்பு, ஒக். 31

விடுதலைப் புலிகளின் 20 தற்கொலைப் படையாளிகளுடன் குண்டு நிரம்பிய லொறி ஒன்று கொழும்புக்கு வந்துள்ளதாக பாதுகாப்புப் பிரிவுக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்திருப்பதாக 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது.

கொழும்பில் தாக்குதல் நடத்தும் நோக்குடன் இந்த லொறி கொழும்பு வந்துள்ளதாகக் கருதப்படுவதாகவும்—

இந்த லொறியைக் கண்டு பிடிக்க படையினர் தேடுதலை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் கொழும்பு நகரில் லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு அருகில் அமைந்துள்ள பாரிய கட்டடம் ஒன்றில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தொலைபேசி அழைப்பையடுத்து நேற்று நண்பகல் நகரில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

தொலைபேசி அழைப்பு மூலம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டதும் அக்கட்டடத்தில் இருந்தோர் வெளியேற்றப்பட்டனர்.

குண்டு செயலிழக்கும் படையினர் தேடுதல் நடத்தி இது ஒரு வெறும் புரளி எனத் தெரிவித்தனர். [இ-3]

## பேச்சுவார்த்தை அடிப்படையிலான தீர்வுஒன்றுக்கே அமெரிக்கா ஆதரவு

### அமெரிக்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக், 31

இலங்கையில் பேச்சு வார்த்தை அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றுக்கே அமெரிக்கா ஆதரவு தெரி[illegible] [illegible] வெளிநாட்டமைச்சர் கார்ல் இன்ரபேர்ட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு தெற்காசிய பிராந்தியத்துக்கான அமெரிக்க சர்வதேச உறவுகள் உப குழுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் ஏற்பட்ட பாரிய குண்டுத் தாக்குதல் சம்பவம் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய தன் அவசியத்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை
பருத்தித்துறை

## ஆண்டு 6 அனுமதி - 1998

- விண்ணப்ப முடிவு திகதி: 20 - 11 - 97
- விண்ணப்பப்படிவம்: பாடசாலை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

- அதிபர்
(50898)


# மரண அறிவித்தல்கள்

## பெஞ்சமின் யோண் பிள்ளை

(முன்னாள் பட்டினசபை ஊழியர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பெஞ்சமின் யோண்பிள்ளை 29. 10. 97 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற பெஞ்சமின், வரோணிக்கம்மாவின் அன்பு மகனும், மேரி லூர்துவின் பாசமிகு கணவரும், ஜெகநாதன் (லண்டன்), யோகநாதன் (லண்டன்), சோதிநாதன் (புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி), ஜொலிநாதன் (புனித ஹென்றியரசர் கல்லூரி), காலஞ் சென்ற ஜீனா மற்றும் யூட்நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஏலி கிறிஸ்ராவின் அன்பு மாமனாரும், காலஞ் சென்ற ஞானப்பிரகாசம், அமிர்தநாதர், காலஞ் சென்ற அந்தோனிப்பிள்ளை, யுஸ்தீனாராணி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 31 - 10 - 97 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். பின்னர் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
சோதிநாதன்
(மகன்)

சில்லாலை. (50885)

## கபிரியல்பிள்ளை சந்திரபாதம்

சுருவிலைப் பிறப்பிடமாகவும், வளன்புரம் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியல்பிள்ளை சந்திரபாதம் நேற்று (30-10-97) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கபிரியல்பிள்ளை - மரியம்மாவின் அன்பு மகனும், பற்றிமா நாயகியின் அன்புக் கணவரும், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற பெடிற் மற்றும் டேவிற், சிறில், சேவியர், இம்மனுவேல், காலஞ்சென்ற திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மாகிரேட் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (31-10-97) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு (ப.நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பற்றிமா நாயகி (லலிதா)
(மனைவி)

981/16, வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (50897)

## நாகரத்தினம் செல்வரத்தினம்

(முன்னாள் வட மாகாண பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் செல்வரத்தினம் 29. 10. 97 இல் காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், நாகரத்தினம் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து பரமேஸ்வரி, சிவகடாச்சம் சவுந்தரநாயகி ஆகியோரின் மருமகனும், சுதாகரன் (International Business Systems Ltd, Colombo), பக்தகௌரி (1997, உயிரியற்பிரிவு மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராணி, கலாமாலினி (ஆசிரியை, வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும், மாரிமுத்து (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேசசெயலகம், புதுக்குடியிருப்பு) அவர்களின் மைத்துனரும் செல்வக்குமாரன், தாமரைச்செல்வி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.97) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் முற்பகல் 10. 00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி தங்கம்மா செல்வரத்தினம்
(மனைவி)

40/3, புகையிரத வீதி.
கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (50894)

# சமய சந்நிதியில்

கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களுக்காக நல்லை பழனி ஆண்டவர் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முதல் ஆறு நாள்களுக்கு காலை 11மணி தொடக்கம் பிற்பகல் 3 30 மணிவரை திருச்செந்தூர் புராணபடனம் நடைபெறும். :(ஐ)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரர் விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கந்த சஷ்டி திருவிழா ஆரம்பமாகி 6 தினங்கள் நடைபெறும்.

தினசரி கந்தபுராணபடனம் வாசித்துப் பயன் சொல்லும் நிகழ்வு ஆலய பரிபாலன சபையின் தலைவர் தம்பு தியாகராசா தலைமையில் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி, நாவலடிப் பிள்ளையார் கோயில் ஐப்பசி வெள்ளி விசேட நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 00 மணி முதல் நடைபெறும்.

பிரார்த்தனைப் பாடல்களை சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய பஜனைக் குழுவினர் நடத்துவர். அதனையடுத்து சமயச் சொற்பொழிவினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் க. தர்மராசா நிகழ்த்துவார். (இ-117)

★ ★ ★

யாழ். குடா நாட்டில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் நாளை சனிக்கிழமையன்று சகல புனிதர் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. (ஐ-30)


## தேவை

அனுபவமுள்ள
மெசின் மைன்டர்
(பிளேற்றின்)
தேவை.
ஸ்ரீ சுப்பிரமணியம்
புத்தகசாலை
235, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(50852)

## A/L 98

வரவு செலவுத்திட்டம்
BY:
திரு. சண்
ஆரம்பம்:
1 - 11 - 1997
(11-00 மணி)
N.C.C.A.
யாழ்ப்பாணம்.
(49832)

## அறியத் தருகின்றோம்

பிரவேச பால பண்டித வகுப்புக்கள் 1997-11-01 சனிக்கிழமை முதல் யா / இந்து மகளிர் கல்லூரியில் வழமையான நேரசூசியின் படி நடைபெறும்.

- ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.
(50892)

யா\பொன்னாலை
வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை
சுழிபுரம்

## வித்தியாபீடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

காலம்: 01 - 11 - 1997 சனிக்கிழமை
முற்பகல் 9.00 மணி

பிரதம விருந்தினர்
அன்னை சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்.
பொன்னாலை, சுழிபுரம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
நல்லதம்பி ஸ்ரோர்ஸ்
மூளாய் (50893)


# கண்ணீர் அஞ்சலி

## நாகரத்தினம் செல்வரத்தினம்

(முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

யாழ்ப்பாண பெருந்தெருக்கள் திணைக்களத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளராக (E. E.) கடமையாற்றி ஓய்வுபெற்று, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளராக (C. E.) கடமையாற்றி பின் வடமாகாணப் பணிப்பாளராக (P. D.) கடமையாற்றிய நாகரத்தினம் செல்வரத்தினம் அவர்களின் மறைவையொட்டி துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்,
வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர்கள் (R M.C.)
(50895) யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட மாணவனும் முன்னாள் சென். ஜோன்ஸ் கல்லூரி லியோக் கழக செயலாளருமான

## செல்வன் செ. வரப்பிரகாஷின்

மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறுப்பினர்கள்,
யாழ். லயன்ஸ் கழகம்.
(சி/1930)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் பார்வதி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், உடுவிலைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த வல்லிபுரம் பார்வதி நேற்று முன்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், பாலகுமாரின் அன்புத் தாயாரும், ஞானசேகரம்பிள்ளையின் (ஞானி — கமநலசேவைகள் திணைக்களம், நல்லூர்) சகோதரியும், அன்னலட்சுமியின் மைத்துனியும், தனுஷா, லோகநாதன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்று, பூதவுடல் சங்குவேலி தம்பளை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ஞானசேகரம்பிள்ளை
(சகோதரன்)

''ஜெகவாசா'',
டச்சு வீதி,
உடுவில். (சி/1932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ்-ஜே. ஆர்.ஒப்பந்தத்தை மீறிய அதிகாரப் பகிர்வை ஏற்கமாட்டோம்

## இந்தியாவிடம் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31

இலங்கை— இந்திய ஒப்பந்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள்— தவிர்ந்த வேறு எதையும் நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று இந்திய அரசிடம் தெரிவித்தேன். இந்தியத் தரப்பும் அதற்கு உடன்பாடு தெரிவித்தது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்த ரணில் அங்கு பிரதமர் குஜ்ரால் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி விட்டுக் கடந்த திங்களன்று நாடு திரும்பினார்.

'இலங்கை அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை ஏற்குமாறு எம்மை நிர்பந்திப்பதற்காக இந்தியா என்னை அழைத்திருந்ததாக வெளிவந்த செய்திகளில் உண்மை எதுவும் இல்லை' என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

# இடி முழக்கத்தால் கொழும்பில் தொலைபேசிகள் செயலிழப்பு

கொழும்பு, ஒக். 31

கொழும்பு மாநகர பிரதேசத்தில் நேற்று முன்தினம் சுமார் 14 ஆயிரம் தொலைபேசிகள் செயலிழந்தன.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கிருலப்பனை, திம்பிரிகஸ்ஸய ஆகிய பகுதிகளிலேயே தொலைபேசிகள் செயலிழந்தன.

இடிமுழக்கம் காரணமாகவே சேவை துண்டிக்கப்பட்டதாக தொலைத் தொடர்புத் திணைக்களம் தெரிவித்தது.

தற்போது தொலைபேசிச் சேவைகள் வழமைக்கு திரும்பி விட்டன. (ஐ-21)

## நால்வருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்டத்தில் கசிப்பு மற்றும்சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் நால்வருக்கு யாழ். நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-9)

# கொழும்பு கைது நடவடிக்கை; கிழக்கு எம். பிக்கள் ஆட்சேபம்

கொழும்பு, ஒக். 31

கொழும்பில் கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம் பெற்ற சுற்றி வளைப்புத் தேடுதலில் ஆயிரத்து 300-க்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டமை எவ்வித ஆதாரமும் அற்ற செயல் என கிழக்கு மாகாணத்தின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

ஜோசப் பரராஜசிங்கம், கே. துரைராஜசிங்கம், பி. செல்வராசா ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற் கண்டவாறு ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையில் சில்லறைக் காரணங்கள் கூறப்பட்டே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-5)

# வலி. வடக்கு குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் வினியோகம்

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் குடியேறிய குடும்பங்களுக்கு தென்னம்பிள்ளைகள் இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன.

மல்லாகம் கிராம அலுவலர்பிரிவில் குடும்பத்துக்கு ஒரு தென்னம்பிள்ளை வீதம்வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இடப் பெயர்வுகளைத் தொடர்ந்து இப்பகுதியில் ஏற்கனவே இருந்த ஆயிரக்கணக்கான பயன்தரும் தென்னை மரங்கள் அழிந்து போயுள்ளன. (ஐ-86)

## அஞ்சலிக்கூட்டம்

யாழ்ப்பாணம்', ஒக். 31

பேராதனைப் பல்கலைக் கழகப்பொறியியல்பீட மாணவன் செல்வவிநாயக பிரகாசம் வரப்பிரகாஷின் நினைவஞ்சலிக் கூட்டமும் பிரார்த்தனையும் கடந்த திங்கட்கிழமை வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராசா தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் அதிபர் இரங்கலுரையாற்றினார்.

அன்றைய தினம் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து ஒரு நாள் துக்கமாக அனுஷ்டித்தனர். (இ-4)

## சைவ நெறிப் பரீட்சை

கொழும்புத்துறை, ஒக். 31

யாழ். சைவ பரிபாலன சபையினர் வருடந் தோறும் பாடசாலை மாணவர்களிடையே நடத்தி வரும் சைவ நெறித் தேர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை8.30 மணிதொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறும்.

இப் பரீட்சைக்கு ஆண்டு இரண்டுதொடக்கம்ஆண்டு12 வரைமொத்தம் 312 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

# கந்தசஷ்டியை ஒட்டி சந்நிதியில் சொற்பொழிவுகள்

வடமராட்சி.ஒக். 31

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கோயில் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கந்தசஷ்டி விரத காலத்தையொட்டி தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு விசேட சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்துள்ளது.

நாளை சனிக்கிழமை முதல் 6 ஆம் திகதி வியாழக்கிழமை வரை இச் சொற்பொழிவு இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை பேரவைக்காப்பாளர் சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகரின் ஆசியுரையுடன் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ்''முத்தமிழால் வைதோரையும் வாழ வைப்போன்'' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

2 ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை பேரவைக்காப்பாளர் பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்களின் ஆசியுரையுடன் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்ற தலைப்பிலும்—

3 ஆம் நாளான திங்கட்கிழமை பேரவைக் காப்பாளர் சிவ ஸ்ரீ கை. நமசிவாயக் குருக்களின் ஆசியுரையுடன் வலி.வடக்கு பிரதேச சபை நூலகத்தைச் சேர்ந்த ''சிவானந்தவாரி'' சிவத் திரு வ.குமாரசாமி ஐயர்'' கந்தன் கருணை கை கூட்டும் கந்த சஷ்டி'' என்ற தலைப்பிலும் சொற் பொழிவாற்றுவார்கள் (ஐ-173)

## கிராம சேவையாளரிடம் பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் — தேசிய அடையாள அட்டை எடுத்தவர்கள், எடுக்காதவர்கள், அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள்— உடனடியாக தமது விவரங்களை தத்தமது கிராம சேவையாளர்களிடம் பதியுமாறு யாழ். பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்படவுள்ளதால் விவரம் சேகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)


## இதய அஞ்சலி

### நாகரெத்தினம் செல்வரெத்தினம்

(பொறியியலாளர், ஓய்வு பெற்ற வடமாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

யாழ். இந்து மகளிர் கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் பொன் விழாக்குழுச் செயலாளராகவும் இருந்து கல்லூரிக்கு அரும்பணி ஆற்றிய பொறியியலாளர் திரு. நா. செல்வரெத்தினம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவிகள் சங்கம்,
நலன்விரும்பிகள்,
**யாழ். இந்து மகளிர் கல்லூரி.**

(50887)



## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

★ வட இலங்கையில் புத்தம் புதிய தமிழ்த் திரைப்படங்களைத் தரமான வீடியோ பிரதியில் தந்தும்,

★ புதிய-பழைய திரைப்படங்களை ஒறிஜினல் பிரதியாக வெளியிட்டும் வந்த நாம்
இப்பொழுது

★ பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்களை வீடியோ CD யிலிருந்து நேரடியாக, குறைந்த கட்டணத்தில் பதிவு செய்து தருகின்றோம்.

### எமது வீடியோ CD வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| சூரியவம்சம் | பூமணி | அவ்வை சண்முகி | கல்யாணப் பரிசு |
| நேருக்குநேர் | சின்னத்தம்பி | அன்பே வா | உயிரா மானமா |
| பெரிய இடத்து மாப்பிள்ளை | ஆசை | மகா நதி | அபூர்வ சகோதரர்கள் |
| என் ஆசை மச்சான் | பாசமலர் | தெய்வம் | Hits of Rajanikanth |
| மேட்டுக்குடி | குருசிஷ்யன் | காதலிக்கநேரமில்லை | All Time Hits of MGR /Sivagi |
| குருதிப்புனல் | காதல்தேசம் | அருணாச்சலம் | மைக்கேல் மதனகாமராஜன் |
| வெற்றி விழா | செம்பருத்தி | இந்திரன் சந்திரன் | மன்னாதிமன்னன் |

வீடியோ படப்பிடிப்புக்கும், வீடியோ படங்கள் வாடகைக்கும் பெற - பதிவு செய்ய என்றென்றும்

## வீடியோ விமல்

9/1, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாண மாநகரசபை

## கூறுவிலை அறிவித்தல்

8, 9 அல்லது 10 கே. வி. ஏ. வலுவுள்ள பின் வரும் விவரங்களுக்கமைவான தனிவழி புத்தம் புதிய மின்பிறப்பாக்கியை வழங்கக்கூடியவர்களிடமிருந்தான கூறுவிலைகள் எதிர்வரும் 10 - 11 - 97 ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப. 3-00 மணி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**To Supply Brand New Single Phase Generator Capacity Either 8, 9 or 10 K V A.**

**SPECIFICATIONS**

| | |
|---|---|
| 1. GENERATOR: | Brushless, Single Phase |
| VOLTAGE: | 230 Volts |
| FREQUENCY: | 50 C/S |
| 2. ENGINE: | Diesel Engine |
| MAKE: | Perkins Lister Peter |
| POWER: | More than 16 H. P. |
| COOLING: | Air Cooled |
| | Direct Coupled |

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1997-10-29. (சி-1923)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 'ராகிங்' தடை செய்யப்பட வேண்டும்

## வரப்பிரகாஷின் அஞ்சலிக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 31

ராகிங்கைப் பல்கலைக் கழகங்கள் தடைசெய்துள்ள போதிலும், அது கொடிய புற்றுநோய் போன்றுபரவிக் கொண்டே செல்கின்றது. எனவே நாடாளுமன்றச் சட்டம் மூலம் அது தடைசெய்யப்பட வேண்டும்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நேற்று முன்தினம் நடந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடமாணவன் செல்வவினாயகபிரகாசம் வரப்பிரகாஷின் அஞ்சலிக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரனவுக்கு அனுப்பப்பட்டுள்ள இத் தீர்மான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

காலஞ்சென்ற செல்வ வினாயகபிரகாசம் வரப்பிரகாஷ் அவர்களுக்கான அஞ்சலிக் கூட்டம் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டது. அந்நிகழ்வில், பழைய மாணவர், ஆசிரியர், தற்போதைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள், ஏனைய யாழ்ப்பாணப் பாடசாலைகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

மேற்படி கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும், பேராதனைப் பல்கலைக் கழக, பொறியியற் பீட முதலாம் ஆண்டு மாணவனுமாகிய வரப்பிரகாஷ், பகிடிவதையென்ற பெயரில் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு சிறுநீரகம் பாதிப்புற்ற நிலையில் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி காலமானார். இச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

பகிடிவதையைப் பல்கலைக் கழகங்கள் தடைசெய்துள்ள போதிலும், அது கொடிய புற்றுநோய் போன்று பரவிக்கொண்டே செல்கிறது. எனவே, இக் காட்டுமிராண்டித்தனமான பகிடிவதையை நாடாளுமன்றச் சட்டமூலம் தடைசெய்யுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம் — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ 5)

# இந்திய மீனவர் விடுதலை இழுபறி நிலையில்!

கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பான விடயம் தொடர்ந்து இழுபறி நிலையில் இருந்து வருகிறது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த அ. செபஸ்ரியன், பீ. ஆனல்ட், இ. ஷான் ஆகிய இந்த மூன்று மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான விசாரணை யாழ். நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து இவர்கள் தொடர்பாக எந்தவித பதிலும் கிடைக்காததால் இவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ. என். இராமச்சந்திரன் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கினார்.

இவர்கள் கடந்த 108 நாள்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள போதும் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை.

இவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் இவர்களை யார் பொறுப்பேற்பது என்பதிலும் சிக்கல்நிலை காணப்படுகின்றது.

இம் மீனவர்கள் சார்பாக வாதிடும் பி. பூலோகசிங்கம், எம். ராதாகிருஷ்ணன் ஆகியோர் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் தம்மால் இவர்களைப் பொறுப்பேற்க முடியாது எனக் கூறிவிட்டனர்.

இந்தியத் தூதரகத்துடன் தொடர்புகொண்டபோது அவர்களும் இதுவரை பதில் அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-9)

# செம்பியன்பற்று நூலகத்தை இயங்க வைக்க முயற்சி

கடந்த ஒன்றரை வருடகாலமாக மூடப்பட்டிருக்கும் செம்பியன்பற்று பொது நூலகத்தை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்தகால இடப்பெயர்வு காரணமாக பாதுகாப்புக் கருதி மூடப்பட்டிருந்த இந்த நூலகத்தை தற்காலிக கட்டடமொன்றில் திறந்து வைப்பதற்கான ஒழுங்குகளை பருத்தித்துறை பிரதேச சபை பேற்கொண்டு வருகின்றது.

அடுத்தாண்டு ஆரம்பத்தில் இந்த நூலகம் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேநேரம் இந்நூலகத்திற்கான நிரந்தரக் கட்டடம் மருதங்கேணியிலுள்ள செம்பியன்பற்று உப அலுவலக வளவில் பூர்த்தியாக்கப்படாத நிலையில் உள்ளது. இக்கட்டடத்தினை பூர்த்தியாக்குவதற்கான நடவடிக்கையும் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-ரீ)

# தொண்டர் ஆசிரியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்கள் தத்தமது கோட்டப் பணிப்பாளர்களை இன்று சந்திக்குமாறு இரு வலயப் பணிப்பாளர்களும் கேட்டுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்கள் தமது பெயர், விலாசம், வயது, கல்வித்தகைமை, சேவை புரிந்த காலம் ஆகிய விவரங்களுடன் நியமனக் கடிதப் பிரதியையும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

# கரப்புக்குத்தி காவலரண் மீது செவ்வாய் இரவு தாக்குதல்

கனகராயன் குளத்துக்கு வட — கிழக்கே கரப்புக்குத்தியில் அமைந்துள்ள காவலரண் மீது கடந்த செவ்வாய் இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இருமணி நேரம் இடம்பெற்ற இத்தாக்குதல் குறித்த சேதவிவரம் தெரியவரவில்லை. நேற்று முன்தினமும் அப்பகுதியில் சிறு சிறு மோதல்கள் இடம்பெற்றன.

அதேநேரம் — அப்பகுதியில் கடும் மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# பிரசவத்தின்போது நிலத்தில் வீழ்ந்த சிசு குறைப்பிரசவமானது என விளக்கம்

யாழ்ப்பாணம் ஒக். 31

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இம்மாதம் ஒன்பதாம் திகதி பிரசவத்தின் போது இறந்த குழந்தை குறைப் பிரசவமானது என்றும்—

குழந்தை பிறந்த பின்னர் இறக்கவில்லை என்றும் —

மேற்படி வைத்திய சாலையின் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

''நடைபயின்ற கர்ப்பிணியின் சிசு நிலத்தில் வீழ்ந்து மரணம்! யாழ். ஆஸ்பத்திரியில் சோகச் சம்பவம்'' என்ற தலைப்பில் 20-10-97 ஆம் திகதி உதயனில் 3 ஆம் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து அனுப்பிய விளக்கக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விளக்கக் குறிப்பு வருமாறு:

மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி பிரசவ விடுதியில் கடமையாற்றும்தாதிமார்கள், மருத்துவ மாதர்கள் மற்றும் ஊழியர்கள் மிகவும் மனவேதனைப்படுகிறார்கள்.

மேற்படி சம்பவத்தின் உண்மையான நிலை பின்வருமாறு:

1) சம்பந்தப்பட்ட கர்ப்பிணித்தாய் அனுமதிக்கப்பட்ட நேரம் பிற்பகல் 2.50 மணி (6.15 மணி அல்ல).
2) அனுமதிக்கப்பட்ட காரணம் - சிசுவின் துடிப்பு நின்றுவிட்டமையும், நாரிக்குத்தும்.
3) பிரசவம் எதிர் பார்க்கப்பட்ட திகதி — 04-12-97.

நோயாளியை பரிசோதித்த விடுதியில் வைத்திய நிபுணர் தலைமாட்டுச்சீட்டில்சிசுவிற்கு நாடித் துடிப்பு இல்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்பார்க்கப்பட்ட திகதியிலிருந்து சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் முழுப் பிரசவம் எதிர்பார்க்கப்பட முடியாது. இக்குழந்தை குறைப்பிரசவமானகுழந்தை. குழந்தை பிறந்த பின் இறக்கவில்லை.

மேலும் அந்தத் தாய்பிரசவ [illegible] வெளியேற வில்லை. இரத்த அழுத்தம் காரணமாக 16-10-97 வரை சிகிச்சை பெற்று 16-10-97 அன்றே வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியர் குறிப்பு:

(1) செய்தியில் குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்றது என்பது மறுக்கப்படவில்லை. சிசு இறந்து பிறந்தது என்பது வைத்திய அறிக்கை. சம்பந்தப்பட்ட தாயோ தமது குழந்தைபிறந்த பின்னர் இறந்ததாகவே கருதினார்

(2) அனுமதிக்கப்பட்ட நேரம், ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறிய நேரம் என்பனவற்றில் உள்ள வேறுபாடுகள் சம்பவத்தின் உண்மைத் தன்மையை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. (அ)


# யேகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யேகோவாவின் சாட்சிகளின் ஒருநாள் மாநாடு
இம்முறை நவம்பர் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை
**யாழ். இளங் கலைஞர் கலா மண்டபத்தில்**
நடைபெறவுள்ளது
இம் மாநாட்டின் தலைப்பு
**"அனைத்தையும் நற்செய்தியின் நிமித்தம் செய்யுங்கள்" என்பதாகும்.**
மாநாடு காலை 9.55 - க்கு ஆரம்பித்து
''நற்செய்தியை ஒப்படைக்கப்படுவதற்கு தகுதியுடன் இருத்தல்''
என்ற பகிரங்கப் பேச்சுடன் பி. ப. 4மணிக்கு முடிவடையும்.
அனைவரும் வருகை தரும்படி அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

**சீ. சின்னத்தம்பி**
செய்தி தகவல் பகுதி,
யேகோவாவின் சாட்சிகள், 773/55, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (50867)



# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் கதிரவேலு சந்திராசா**
(தலைவர், ஊ. ந. பு. சங்கம், வலி. கொத்தணி மானிப்பாய்)

மலர்வு: **05-05-1953**
உதிர்வு: **31-10-1995**

பாரெல்லாம் ஒளியை வீசும் எங்கள் சந்திரன் நீ மதியை ஒத்தாய்
ஊரெல்லாம் போற்றும் வண்ணம் உயர்த்தினாய் சங்கமதை
பேரெல்லாம் உனக்குத்தானே பேசிடத்தான் நீயிங்கில்லை
நாலாறு மாதமாயும் நாம் உன்னை நேசிக்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன் புரிச்சங்கம்,
வலி. கொத்தணி, மானிப்பாய்.
மானிப்பாய்.
(50841)



# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
செல்வி பக்தகௌரி செல்வரட்ணம்
அவர்களின் அன்புத்தந்தையார்
**நாகரட்ணம் செல்வரட்ணம்** அவர்களின்
மறைவிற்காக எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நண்பிகள்,
97 உயிரியல் பிரிவு மாணவிகள்
**யாழ். இந்து மகளிர் கல்லூரி.**
(50889)



ஓம் ஸ்ரீசாயிராம்
வடபிராந்திய
சத்திய சாயி சேவா நிலையங்கள்
இணைந்து நடத்தும்

# மனித மேம்பாட்டுக் கண்காட்சி

**காலம்: 02-11-1997 ஞாயிற்றுக்கிழமை**
**03-11 1997 திங்கட்கிழமை**
காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை
**இடம்:- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை**

பிரசாந்திக் கொடியேற்றல்:
ஸ்ரீ செ. சிவஞானம் அவர்கள்
(இலங்கை மத்திய இணைப்பாளர்)

ஆரம்பித்து வைப்போர்:
ஸ்ரீ S. சிவராசா அவர்கள்
(கல்விப் பணிப்பாளர் வலயம் 11)
ஸ்ரீ வே. தி. செல்வரத்தினம் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை கல்விக் கோட்டம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசம் இலவசம்.

வட பிராந்திய சத்திய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழு
(50796)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.

# உள்ளாடையுடன் வியர்வை வடிய
# பிரகாஷ் இருப்பதைக் கண்டேன்

## மரண விசாரணையில் சக மாணவன் சாட்சியம்

கொழும்பு, ஒக். 31

பெனிதெனிய வீட்டின் முதலாவது அறையில் நண்பன் பிரகாஷ் சதீஸ்கரனின் முன்னால் முழங்கால் போட்டிருந்தார். உடம்பு முழுவதும் வியர்வை வடிந்திருந்தது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கடந்த 6 ஆம் திகதி சிரேஷ்ட மாணவர்களால் மேற் கொள்ளப்பட்ட பகிடிவதையின் காரணமாக நோய்வாய்ப்பட்டு மரணமான பொறியியல் பீட மாணவன் எஸ். வரப்பிரகாஷின் மரண விசாரணையில் சாட்சியமளித்த பொறியியல் பீட முதல் வருட மாணவன் கதிர்காமத்தம்பி ஈசன் (வயது 22) முன்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு நகர திடீர் மரண விசாரணை அதிகாரி பெரேராவின் முன்னிலையில் நடந்த மரணவிசாரணையில் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 6 ஆம் திகதி எமக்கு ஆங்கில வகுப்பு 8 மணிக்கு ஆரம்பமாகி 4 மணிக்கு முடிவுற்றது. வகுப்பு முடிவுற்றதும் அக்பர் மண்டபத்துக்குப் போனோம். எமக்கு தரப்பட்ட அறையில் நானும் சுரேந்திரனும் சிரேஷ்ட மாணவரான இறைவனும் தங்கியிருக்கின்றோம். இறைவன் எனக்கும் சுரேந்திரனுக்கும் பேராதனை பெனிதெனியாவுக்குச் சென்று தன்னுடைய ''சூட்கேஸ்'' ஒன்று இருப்பதாகவும் அதனை எடுத்து வரும்படியும் சொன்னார்.

இரவு 8–30 மணியளவில் நானும் சுரேந்திரனும் பெனிதெனியாவுக்குச் சென்றோம். அங்கு செல்லும் போது 8–45 மணியாகி விட்டது.

பெனிதெனியாவில் அமைந்திருக்கும் வீடு சிங்களவர் ஒருவருடையது. அவ் வீட்டில் இரண்டு அறைகள், பேராதனை சிரேஷ்ட பல்கலைக் கழக மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன.

பெனிதெனிய வீட்டின் முதலாவது அறை இலேசாக திறந்திருந்தது. நாம் உள்ளே பார்த்தோம். அங்கு எமது நண்பன் பிரகாஷ் உள் ஆடையுடன் கைகளை பின்னால் கட்டிக் கொண்டு முழங்காலில் இருந்ததை நாம் பார்த்தோம்.

அவ்வறையில் சதீஸ்கரனும் திவாகரனும் இருந்தார்கள். பிரகாஷ், சதீஸ்கரனின் முன்னால் முழங்கால் போட்டிருந்தார். உடம்பு முழுவதும் வியர்வை வடிந்தது.

பிரகாஷ் எப்படி இங்கு வந்தார் என எமக்கு தெரியாது.

நாம் எமது நண்பன் பிரகாஷுடன் கதைக்கவில்லை. காரணம் அங்கு சிரேஷ்ட மாணவர்கள் இருந்தபடியால் நாம் நினைத்தோம் ராகிங் என்று. நாம் இறைவனின் சூட்கேஸை எடுப்பதற்கு அடுத்த அறைக்குச் சென்றோம். அங்கு ஐந்து சிரேஷ்ட மாணவர்கள் இருந்தார்கள்.

துளசிகாந்தன், குமரேசன், குமரன், காந்தரூபன், தயாளன் இவர்கள் அனைவரையும் நாம் பல்கலைக்கழக வளவினுள் கண்டுள்ளோமே தவிர பேசியது கிடையாது — என்றார்.

மரணமான பிரகாஷின் தந்தை டாக்டர் செல்வவிநாயகம் கூறுகையில்:-

எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் இருக்கின்றார்கள். மரணமானவரப்பிரகாஷ் இரண்டாவது பிள்ளை. படிப்பில் மிகக் கெட்டிக்காரன். தான் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டதால் மிகவும் சந்தோஷம் அடைந்தார். இலங்கை பட்டயக்கணக்காளர் பாடநெறியில் இறுதி அங்கத்தின் பரீட்சையை அடுத்த மாதம் எடுக்க இருந்தான் என்றார்.

மேலும் அவர் மரணவிசாரணை அதிகாரியிடம், ராகிங் செய்த மாணவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் எதிர்காலத்தில் இப்படியான ராகிங்குகள் இருக்கக்கூடாது என தாம் அரசாங்கத்திடமும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடமும் கேட்டுக் கொள்வதாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைகளை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி டி. அல்விஸ் தமது அறிக்கையில் உடல் வருத்தப்பட்டதால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டதுடன் தசை நார்களில் ஏற்பட்ட சிதைவும் மரணத்திற்கு காரணம் என குறிப்பிட்டிருந்தார்.

(ஐ-21)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 31

கலைப்பீட 2 ஆம் வருட 'பி' பிரிவு மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (இ)

## கோப்பாயில் முதியோர் விழா

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் கோப்பாய் பிரதேசச் செயலகத்தினால் நடத்தப்படும் சிறுவர், முதியோர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00மணிமுதல்நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் பிரதேசச் செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் செயலக மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக வலயம்-2 கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா, கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி க. இராசேந்திரன், வைத்திய கலாநிதி வை. தியாகராசா, ஏ. வி. மயில்வாகனம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

கவிதை, கட்டுரை ஓவியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். கிராம சேவை உத்தியோகத்தர்பகுதிகளுடாகத் தெரிவு செய்யபபட்ட முதியோர்கள் கௌரவிக்கப்படுவர்.

(ஐ-154)

# கெடுவினை நீக்கும் கேதார கௌரி விரதம்

இன்று கேதாரகௌரி விரதம்.

இந்த விரதம் மிகவும் மகிமை வாய்ந்தது. கேதாரம் என்பது இமாலய பர்வதத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். இங்கு எழுந்தருளியிருக்கும் சிவன் கேதாரீஸ்வரராக அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

இந்த விரதம் கேதாரீஸ்வரரைக் குறித்து உமாதேவியார் அனுட்டித்த விரதமே. இது ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசித் திதியிலே அனுட்டிக்கப்படுகிறது. புரட்டாதி மாதத்துப் பூர்வ பக்கத்து அட்டமித் திதி முதல் அமாவாசை வரையுள்ள இருபத்தொரு நாள்கள் அல்லது அபரபக்கப் பிரதமை முதலாக சதுர்த்தசி ஈறாகவுள்ள பதினான்கு நாள்கள் அல்லது அட்டமி முதல் சதுர்த்தசி முடியவுள்ள ஏழுநாள்கள் அல்லது கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசித் திதியிலன்று அனுட்டிக்கப்படும்.

## ஞானக் கதிர்

அம்பாள் ஆலயங்களில் இவ் விரத நாளில விசேடபூசை நடைபெற்று வில்வார்ச்சனை இடம்பெறும் இந்த விரதம் அனுட்டிப்பவர்கள் இருபத்தொரு இழையினாலான காப்பை பெண்கள் இடக்கையிலும் ஆண்கள் வலக்கையிலும் கட்டிக் கொள்ளுதது வேண்டும். முதல் இருபல் நாளும் விரதமிருந்து சூரிய அஸ்தமனத்தின் பின் போசனம் செய்து இரவிலே தர்ப்பை அல்லது புல்லினால் இழைத்த பாயில் துயிலுதல் வேண்டும்.

இறுதி நாளாகிய சதுர்த்தசியிலன்று உபவாசமிருந்து கேதார கௌரீஸ்வரரை மனதிலே தியானித்து, தமது வாழ்க்கை நல்ல மங்கலகரமாக அமைய வேண்டும்என்று வேண்டி சிவபூஜை செய்து காப்புக்கட்ட வேண்டும். பெண்கள் தமது மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்றும் ஆண்கள் தமக்கு சம்சாரம் நன்கு அமைய வேண்டும் என்றும் வேண்டிக் கொள்வர்.

தேவார திருவாசகங்களை ஓதி அம்பிகையின் நாமங்களை உச்சரித்து அன்றிரவு நித்திரை செய்யாது கண் விழித்திருந்து மறுநாள் உதயத்தில் பாரணை செய்தல் உத்தமம்.

அது முடியாதவர்கள் ஆலயத்துக்குச் சென்று அர்ச்சனை செய்து அம்பிகையை வேண்டி, நள்ளிரவு வரை விழித்திருந்து மறுநாள் பாரணை செய்யலாம். இந்த விரதம் அனுட்டித்தால் கேடு நம்மை விட்டு விலகி மோட்சமாகிய பேரின்ப வீடு கிட்டும் என்பது நம்பிக்கை.

ஆகவே, கேதார கௌரி விரதத்தை முறையாக அனுட்டித்து வாழ்வில் சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வோமாக.

– ஸ்ரீ சத்தியபாமா

# அறவழிக் குழுவினர் விவசாயிகளுக்குப் பண உதவி

தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கு வழங்கவென அறவழிப் போராட்டக் குழுவினர் மூன்று லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளனர்.

இக் கடனுக்கு விண்ணப்பித்த விவசாயிகளுக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் அறவழி தலைமைச் செயலகத்தில்வைத்து வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் நவம்பர் 26 ஆம் திகதி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இக் கடன் பெற விரும்பும் விவசாயிகள் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறவழி தலைமைச் செயலக நிர்வாக அலுவலர் வே. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (அ-117)

# யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை:
# ராகிங் என்ற பெயரில் நடக்கும் அநாகரிக செயல்கள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்

## துண்டுப் பிரசுர மோதல் வேண்டாம்!

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட மாணவன் செ. வரப்பிரகாஷின் மரணம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை இது.

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட மாணவன்செ. வரப்பிரகாஷின்அகாலமரணம் எம்மையெல்லாம் பெரும் அதிர்ச்சிக்கு உட்படுத்தியுள்ளது. இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றில் முதன் முதல் நிகழ்ந்த இந்த கோர மரணம் தமது கலாசார விழுமியங்களில் பெருமிதமும் கர்வமும் கொண்டுள்ள தமிழ்ச் சமுதாயத்தில் நிகழ்ந்துள்ளமை வேதனைக்குரியது. இந் நிகழ்வானது தமிழினத்தின் தன்மானத்திற்கும் சுயகௌரவத்திற்கும் விழுந்த மாபெரும் அடியாகும். ஒரு சில மாணவர்கள் சம்பந்தப்பட்ட இந்த நிகழ்வு அவர்களை மட்டும் பாதிக்காது இன்று உலகெங்கும் பரந்து வாழும் அனைத்துத் தமிழர்களையும் பாதிக்கும் நிகழ்வாகிவிட்டது. இவ்வாறான ஒரு சம்பவம் நிகழ்ந்தமைக்கு பல்கலைக்கழக மாணவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் எமது ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

''ராகிங்'' என்பது பகிடியாகி, பயமுறுத்தலாகி, முறித்தலாகி, இப்போது முடித்தல் என்றாகிவிட்டது. இதில் பாதிக்கப்பட்ட மாணவன் இறந்தமையால் அது உடனடியாக உலகத்துக்கு வெளிக்காட்டப்பட்டு விட்டது. ஆனால் வெளியில் தெரியவராமலே பல்வேறு 'ராகிங்' கொடுமைகள் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் நிகழ்ந்து வருகின்றன, ஒருவரை கொலை செய்வதை அல்லது காயப்படுத்துவதையெல்லாம் ''ராகிங்'' என்ற பெயரில் அடக்குவது துரதிர்ஷ்டவசமானது. 'ராகிங்' என்ற பெயரில் நடக்கும் இவ்வாறான இழிசெயல்கள் நிச்சயமாகக் கண்டிக்கப்பட வேண்டியவை.

'ராகிங்'கால் ஏற்பட்டதாகக் கருதப்படும் இம் மரணம் பலருக்கு மனக்கொதிப்பையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கும் இவ்வேளையில் இங்கு நடைபெறும் மற்றுமொரு செயல் எம்மை மேலும் வேதனைக்குட்படுத்தியுள்ளது. தற்போது பாடசாலை மாணவர்களால் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கும் துண்டுப்பிரசுரங்கள் பல பரஸ்பரம் பாடசாலைகளைச் சாடுவது போலவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களைச் சாடுவது போலவும் அமைந்துள்ளன. இது ஓர் ஆரோக்கியமான நிலைமையல்ல.

இது வீண் சச்சரவுகளையும் பிளவுகளையும் மாணவ சமுதாயத்தில் ஏற்படுத்திவிடும் ஆபத்து உண்டு. இத [illegible] அதிபர்களும் ஆசிரியர்களும் தமது காத்திரமான பங்களிப்பைச் செய்வதுடன் ஒரு சில மாணவர்கள் எதேச்சையாக ஒரு குறித்த பாடசாலையின் பெயருடன் துண்டுப்பிரசுரங்களை வெளியிடும் நிலைமையைத் தடுக்க வேண்டும்.

ஒப்பீட்டளவில், யாழ். பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' செயன்முறை மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. பெரும்பாலான மாணவர்கள் பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பிலேயே இருப்பது இதற்கு ஒரு காரணமாகும். இருப்பினும் உடலையும் மனதையும் புண்படுத்தும் அநாகரிகச் செயல்கள் எமது பல்கலைக்கழகத்திலிருந்து முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும். ஒத்துழைப்புத் தரவேண்டும்

மேலும், மரணத்தில் முடிந்த மேற்படி ''ராகிங்'' இல் ஈடுபட்ட மாணவர்கள் உண்மையில் கொலை புரிய வேண்டுமென்று மனத்தளவிலும் கருதியிருக்கமாட்டார்கள என்றே நம்புகிறோம். சம்பந்தப்பட்ட மாணவன் உடல், உள ரீதியாகவோ அல்லது வேறு காரணங்களாலோ மேற்படி நிகழ்ச்சியைத் தாங்கமுடியாது போயிருக்க வாய்ப்புண்டு.

மரணத்தில் முடிந்த மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கருதப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களில் பலர் இச்சம்பவத்தில் எதிர்பாராத விதமாக சம்பந்தப்பட்டோ, சம்பந்தப்படாமலோ இருக்க வாய்ப்புண்டு. இந்த ராகிங் சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட மாணவன் அல்லது மாணவர்கள் நடந்து முடிந்த உண்மைச் சம்பவங்களை ஒப்புக் கொள்வதன் மூலம் சம்பவத்தில் சம்பந்தப்படாத மாணவர்களின் விடுதலைக்கு வழி சமைப்பார்களாயின் அது அவர்களின் உயர்ந்த பண்புடைமையை வெளிப்படுத்தும்.

எது எவ்வாறாயினும், இந் நிகழ்வானது ''ராகிங்'' கில் ஈடுபடுகின்ற அல்லது ''ராகிங்'' நடைபெறும் இடத்தில்நிற்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் ஓர் எச்சரிக்கையுடன் கூடிய பாடமாகும். இந்த அனுபவத்தை மனதிற் கொண்டு எமது மாணவர்கள் கனிஷ்ட மாணவர்களுடன் பழகுவார்கள் என நம்புகிறோம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி பெரிய அரசடி தாமோதரம் வீதிச்சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் 80 ஆம் ஆண்டு கட்டப்பட்ட சகல வசதிகளும் கொண்ட வீடு (பேரப்பு)விற்பனைக்குஉண்டு. தொடர்பு: க. முருகேசு, பெரிய அரசடி, சாவகச்சேரி. (50879)

**தவறிவிட்டது**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பிரதம நூலகரின் சில திறப்புகளும், ஒரு வெள்ளை ஆமைப்பூட்டும் சேர்ந்த கோர்வை 27-10-97 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்; செ. அருளம்பலம், மத்தியகல்லூரிநூலகரிடம்ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [50880]

செல்வி ஹேமலதா சோமசுந்தரம் என்பவரது 775621796V இல. தேசிய அடையாளஅட்டை, விசேட, பாடசாலை அடையாள அட்டைகள் 27.10.97அன்று பூபாலசிங்கம் புத்தகசாலைக்கும், பஸ் நிலையத்திற்கும் இடையில் போர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திரு. ம. சத்தியபாலன், உதயன் காரியாலயம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (50882)

**O/L கணிதம் 97**

Distinction பெறுபேறடைவதற்கு 32 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினாவிடை வகுப்புகளும் நிறைவேற்றப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (50835)

**றோணியோ**

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள், றோணியோ வேலைகள் சிறந்தமுறையில் செய்து கொள்ள பொஸ்கோ பாடசாலை முன்பாக, பெர்ஸ்கோ றோணியோ ஸ்ரென்சில் கட்டிங் 10/-, இருபக்கறோணியோ30/-. [50878]

**உலக சிக்கன தினம்**

உலகசிக்கன தினம்31-10-97 சிக்கனத்திற்கு மில்க்வைற் தயாரிப்புக்கள். பாவித்த மேலுறைக்கு அறிவுநூல்கள், படங்கள், யோகாசனப் படம், மரக்கன்றுகள், மில்க்வைற் செய்தி. [சி/1920]

**விண்ணப்பப் படிவம்**

ஆசிரியர் கலாசாலைப் படிவம் விற்பனையாகிறது. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (49831)

தொழில் நுடபக்கல்லூரி டிப்ளோமா பயிற்சிக்கான படிவம் விற்பனையாகிறது. விலை ருபா 2. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (49830)

**பிறீமாகோழிக்குஞ்சு**

06-11-97 அன்று ஒருநாள் புறோயிலர் குஞ்சும், கைவலயின் சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.கண்ணா வீடியோ சென்ரர், மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [50814]

**சிங்கள வகுப்புக்கள்**

சனி, ஞாயிறு நாள்களில் எழுத்து, பேச்சு பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 1997 டிசம்பர் க. பொ. த. (சா/த) சிங்களம்(I,II) வினாவிடைவகுப்பும் நடைபெறும். த. சகாதேவன், 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (50804)

## JAFFNA SCIENCE ASSOCIATION
## ANNUAL SESSIONS, APRIL 1998
## CALL FOR ABSTRACTS OF PAPERS

We are pleased to inform members that the date for submission of abstract of papers has been extended upto

**17 th November 1997**

We are unable to contact members individually as their present addresaes are not known. Please communicate with the General Secretary, your present addresses.

**Prof. K. Chitravadivelu**
General Secretary/JSA.
**University of Jaffna.**

(50859)

## வடமாகாண அதிபர்கள் சங்கப் பொதுக்கூட்டம்

இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி
காலம்: 01-11-1997 சனிக்கிழமை
காலை 10-00 மணி (புதிய நேரம்)
தலைமை: திரு. க. சந்திரசேகர
(உபதலைவர்)
அதிபர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

★ இடர்காலக் கொடுப்பனவு
★ அதிபர்களின் கல்விசார் பிரச்சினைகள்
★ சம்பள முரண்பாடு
★ போர்ச்சூழலால் அதிபர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

ஆகிய விடயங்களை முன்னெடுக்க அதிபர் சேவை தரம் 1, 2, 3இல் உள்ள அதிபர்கள் யாவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்கின்றோம்.

ஆ. சி. நடராஜா,
செயற்குழு சார்பில்,

**அதிபர்,**
**வசாவிளான் மத். மகா வித்தியாலயம்.**
[50861]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கதிரவேலு சந்திரராசா**
(பொதுமுகாமையாளர், வலிகாமம் ப. தெ. வ. அ, கூ.ச. கொத்தணி)

மலர்வு: **05 — 05 — 1953**
உதிர்வு: **31 — 10 — 1995**

வலிகாமம் கொத்தணியின் வலதுகை போல நின்றாய்
ஒலியின்றிச் சேவை செய்தாய் ஒளி பெற்றோம் நாமெல்லோரும்
வலியின்றித் திருத்திடுவாய் உன் வழியெல்லாம் ஒளியே- இங்கு
சலிப்பின்றி உன் வழியில் சற்றும் தளராமல் செல்வோம்- நாமே

ஓம் சாந்தி!
ஓம் சாந்தி'!! ஓம் சாந்தி!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வலிகாபம் [illegible] தெங்கு [illegible] அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கலின் கொத்தணி,
மானிப்பாய். (50840)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகை அலங்கரிப்பாளர்களுக்கு மீண்டும் ஒரு நற்செய்தி!

உங்களுக்குத் தேவையான சகல சலூன் பொருள்களும் எம்மிடம்சில்லறையாகப் பெற்றுக்கொள்ளலாம்.
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:

**இளங்கோ**
**சிகை ஒப்பனை நிலையம்**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தி.
(50829)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. நாகரத்தினம் செல்வரட்ணம்**
(முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

எமது முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர் திரு. நா. செல்வரட்ணம் அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகல உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
**மாகாணப் பணிப்பாளர்**
**வ-கி (வடக்கு) அலுவலகம்,**
+
**பிரதம பொறியியலாளர் அலுவலகம்**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.
(50884)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. நாகரெத்தினம் செல்வரெத்தினம்**
(பொறியியலாளர், ஓய்வுபெற்ற வடமாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை)

எங்கள் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச் செயற்குழு உறுப்பினராகவும், பொன்விழாச் சபை செயலாளராகவுமிருந்து கல்லூரிக்குத் தமது முழுப் பங்களிப்பையும் நல்கி வந்த

**திரு. நா. செல்வரெத்தினம்**

அவர்களின் மறைவைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரது பிரிவால் துன்புறும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவிகள், ஊழியர்கள்.**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி.**
(50888)

## 90 ஆம் நாள் நினைவகலா அஞ்சலி

மலர்வு: 25 — 10 — 1975



உதிர்வு: 03 — 08 — 1997

**செல்வன் சுப்பிரமணியம் சசிகரன்** (ஜேர்மனி)
(குப்பிளான்)

அரும்பாகச் சென்றவனே!
எங்கள் அன்பை அள்ளிச் சென்றவனே!
சென்ற மண்ணில் மலர்ந்து
மணம் பரப்புமுன்னே – உதிர்வதுன் விதியோ!
கலைலாகி காற்றாகி கனவாகிப் போனாயே!
காலமெலாம் எம் இதயம் எரியுண்டு வேகுதையா!
இறைவன் பதமலராய்ச் சாந்திபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் உதிர்வால் ஆற்றொணாத் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பிமார்,
தங்கைமார், சித்தப்பா, சித்தி,
அத்தை.

குப்பிளான்,
ஏழாலை.
(50863)

# உதயன்

## எழுதா விதியா?

கொழும்பு நகரில் கடந்த சனிக்கிழமை மூன்றாம் சாமப் பொழுதில் பாதுகாப்புப் படையினர் தமிழர் வாழும் பகுதிகளில் நடத்தியதிடீர்த் தேடுதல் —சுற்றிவளைப்பு—கைது நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்களில் சுமார் 140 பேர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இந்தச் சுற்றி வளைப்பு ஏன் நடத்தப்பட்டது?

கலதாரி ஹோட்டல் மற்றும் உலக வர்த்தக மையம் என்பவற்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் பின்னர், நகரில் மறைந்திருக்கக் கூடிய விடுதலைப் புலிகளைக் கண்டுபிடிப்பதற்கான ''ஒப்பரேசனே'' இது என்று கருதப் பட்டது.

ஆனால் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்த காரணமோ வேறு!

அரசியல் தீர்வு யோசனை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு விட்டதால் கொழும்பில் வாழும் தமிழர்களுக்கு விடுதலைப் புலிகளால் ஏற்படக் கூடிய பாதுகாப்பு ஆபத்துக்களைத் தடுக்கும் நோக்குடனேயே தமிழர் வீடுகளில் மூன்றாம் சாம வேட்டை நடத்தப் பட்டதாகப் பிரதி அமைச்சர் சொன்னார்.

இது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போட்ட கதையாகவே உள்ளது!

கைது செய்யப்பட்டோர் தண்டிக்கப்படமாட்டார்கள் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தங்கியிருக்கக் காரணம் கூறாமை, தெரிவிக்கப்பட்ட காரணங்களில் திருப்தி இல்லாமை, அடையாளத்தை உறுதிப்படுத்தப் போதிய ஆவணங்கள் இல்லாமை ஆகிய காரணங்களைக் கருதியே அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் தமது பெயர் மற்றும் விவரங்களைப் பதிவு செய்வதில் கெடுபிடிகள் நடப்பது இங்கே குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் எம். பிக்களும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் ஆதாரம் எதுவும் இல்லாத சில்லறைக் காரணங்களுக்காகவே தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்கள் என்ற போர்வைக்குள் தமிழ் மக்களுக்கு எத்தகைய இடர்களையும், வேதனைகளையும் அசௌகரியங்களையும் கொடுக்கலாம் என்பது எழுதா விதியாகிவிட்டது. இப்போதல்ல; அவர்கள் தமது உரிமைப் போராட்டத்தைத் தொடங்கிய பல வருடங்களுக்கு முன்னரே இது ஆரம்பமாகிவிட்டது.

காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில், புதுப்புது வடிவங்களில் அந்த எழுதா விதி தமிழ் மக்களை உடல் உளப் பாதிப்புகளுக்கு ஆளாக்குகின்றது.

தனிப்பட்ட வாழ்க்கையில் பிரவேசித்தல், வாழும் வசதிகளைத் தடுத்தல் உட்படப் பலவும் மனித உரிமைகளைப் பறிக்கும் நடைமுறைகளே.

தமிழர்கள் வடக்கில் என்ன, கிழக்கில் என்ன, தெற்கில் என்ன, மேற்கில் என்ன இலங்கையின் எந்த மூலையில் வாழ்ந்தாலும், அவர்கள் இந்த எழுதா விதிக்கு ஆட்பட்டே ஆக வேண்டியுள்ளது.

அந்த எழுதா விதியை வெல்லும் சக்தியும் சந்தர்ப்பமும் எப்போது வருமோ......?! சனியன் போலத் தொடரும் அது எப்போது நீங்குமோ...?

# தமிழ் - முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டியவர்கள்

## வடக்கு முஸ்லிம்களின் கூட்டத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர் உரை

யாழ்ப்பாணம், ஒக். 31

''வடக்கு — கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயக பூமி ஆகும். தமிழ் — முஸ்லிம் மக்கள் நகமும், சதையுமாக ஒன்றுபட்டு வாழ வேண்டியவர்கள். ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்தால் இரண்டு சமூகமுமே பலவீனப்பட்டுப் போகும். இரு சமூகங்களிடையே ஏற்படக்கூடிய விரிசலுக்குள் தீய சக்திகள் புகுந்து கொள்ளப் பார்க்கின்றன.''

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் கூட்டம் நேற்று புத்தளத்திலுள்ள ஐ. பி. என். பாதுதா மண்டபத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துரையாற்றுகையில் ஈ. பி. டி. பி. அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தங்கவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் சார்பாகக் கலந்து கொண்ட எஸ். தங்கவேல் மேலும் கூறியதாவது:-

வடக்கில் இருந்து வாழும் உரிமை மறுக்கப்பட்டு, நீங்கள் விரட்டப்பட்டு ஏழு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

தீய சக்திகள் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக, இரு சமூகங்களையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கத் துடிக்கின்றன.

தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசங்களை கூறுபோட சமூக மோதல்களை இந்தச் சக்திகள் பயன்படுத்தப் பார்கின்றன.

ஈ.பி.டி. பியைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டு கண்கள் போன்றவை. இரண்டு சமூகங்களும் சரிநிகர் சமமாக, தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதே எமது கட்சியின் இலட்சியமாகும்.

நான் எப்போதும் சொல்வது வழக்கம். நான் விபூதி அணியாத இந்து, சிலுவை அணியாத கிறிஸ்தவன், தொப்பி அணியாத இஸ்லாமியன்.

இன, மத, பிராந்திய பேதங்களுக்கு அப்பாற்பட்டு மனிதனை மனிதன் அடக்கியாளாத, ஆதிக்கம் செய்யாத சமுதாயம் ஒன்று தான் எங்களுக்குத் தேவை.

தமிழ் பேசும் மக்கள் இன ரீதியாக, மொழி ரீதியாக ஒடுக்கப்பட்ட காரணத்தால் தான் இனரீதியாக, மொழி ரீதியாக நாங்கள் போராட வேண்டி ஏற்பட்டது. சிங்கள மக்கள் மீது கொண்ட வெறுப்பாலோ, விரோதத்தாலோ போராடப் புறப்பட்டவர்களல்ல நாங்கள்.

ஈழப்போராளி இயக்கங்களுள் சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஆயுதங்களை திருப்பாத ஒரே ஒரு அமைப்பினர் நாங்கள் தான் என்று கூறுகின்ற தகுதி ஈ. பி. டி. பிக்கு உண்டு.

அந்தத் தகுதியோடும், உரிமையோடும் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன், கடந்தகால கசப்பான உணர்வுகளை மறந்து விடுங்கள். இனி நடப்பவை நல்லதாக அமைய நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவோம்.

கடந்த ஏழு வருட காலத்தில் நீங்கள் பட்ட வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. மனக் காயம் பாரியது. அந்தக் காயத்தை வெறும் சொற்களால் அல்ல, செயல் மூலம் ஆறச்செய்வோம்.

வடக்கில், குறிப்பாக யாழ். குடாநாட்டில் எமது கட்சி தன் அரசியல் பணிகளையும். புனரமைப்புக்கு உதவும் பணிகளையும் செய்து கொண்டிருக்கிறது.

உங்கள் மண்ணுக்கு வாருங்கள். உங்களுக்கு உதவக் காத்திருக்கிறோம். நீங்கள் விரட்டப்பட்டீர்களே தவிர, உங்கள் உணர்வுகள் அங்கே தான் சுற்றிக் கொண்டிருக்கின்றன. உங்கள் முன்னோர்களின் மூச்சுக் காற்றும் வீசும் காற்றில் தான் கலந்திருக்கிறது.

தமிழ், முஸ்லிம் மக்கள் இரண்டறக் கலந்து வாழ்ந்து வாழ்ந்த அந்த மண்ணில் மறுபடி உறவு மலரட்டும். தமிழ் சமூகம் உங்களை வரவேற்கக் காத்திருக்கிறது. உங்கள் சகோதர, சகோதரிகள் உங்களை அழைக்கிறார்கள்.

பட்ட துயர் போதும், உங்கள் வாழ்க்கையைச் சிறைகளில் இருந்து மீட்கவும் கட்டியெழுப்பவும் ஈ. பி. டி. பி. எப்போதும்தோள் கொடுத்து நிற்கும் — என்று தெரிவித்தார்.

(இ-3)

## இலங்கைப் பெண்களுக்கு கசையடி!

கொழும்பு, ஒக். 31

முறை தவறிய பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் இரண்டு இலங்கைப் பெண்களுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இஸ்லாமிய நீதிமன்றம் ஒரு வருட சிறைத் தண்டனையையும், 195 கசையடிகளையும் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.

ஒரு பெண்ணுக்கு 95 கசையடிகளையும், மற்றைய பெண்ணுக்கு 100 கசையடிகளையும வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.

சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர் இந்த இரண்டு பெண்களும் நாடு கடத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (இ-5)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம். ஒக். 31

காங்கேசன்துறை சாரணர் தலைவர்கள் மற்றும்குருளைச் சாரணர் தலைவர்களுக்கான ஒன்று கூடல் எதிவரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும். (இ-ரீ)

# ஐ. தே. கவின் மாற்று யோசனைகள் விரைவில் என்கிறார் ரொனி

கொழும்பு, ஒக். 31

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அதிகாரப்பரவலாக்கல்யோசனைகள் தொடர்பான ஐ. தே. கவின் மாற்று யோசனைகள் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ரொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போதைய அரசியல் நிலைமை பற்றித் தாம் விளக்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

காணி, பொலீஸ் ஆணைக் குழு, அதிகார அலகு ஆகியன தொடர்பான ஐ தே. கவின் மாற்று யோசனைகள் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம்— எதிர் வரும் 7 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடும் செயற்குழு அரசின்யோசனைகள் குறித்து ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-21-3)

## அரசின் யோசனைக்கு எதிராக சிறிமானி கட்சி பிரசாரம் செய்யும்

கொழும்பு, ஒக். 31

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து நாடெங்கும் கூட்டங்களை நடத்த புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணி முடிவு செய்துள்ளது.

இந்த முன்னணியின் செயற்குழுக் கூட்டம் முன்னணித் தலைவி சிறிமானி அத்துலத் முதலி தலைமையில் நடந்த சமயம் இந்த முடிவு எடுக்கப் பட்டது.

முன்னணியின்தேசிய அமைப்பாளராகநாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

[இ-3-21]

# புதிய அரசமைப்பை நிறைவேற்ற ஐ.தே.க. பின்செல்ல தேவை இல்லை

## விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஒக். 31

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன் அரசு தற்போது சமர்ப்பித்துள்ள அரசமைப்புக்கு கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் தமது விருப்பத்தை வழங்கியுள்ளனர். ஆகவே மூன்றில் இரண்டு பங்கு வாக்கைப் பெறுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியை நாடி பின்னால் செல்ல வேண்டிய தேவை இல்லை.

கொழும்பு மகாவலி நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் அரசாங்கம் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள புதிய அரசமைப்பு 1978ஆம் ஆண்டு அரசமைப்பை விட ஜனநாயக ரீதியில் முன்னணியில் உள்ளது.

எம்மை சிறையில் அடைத்து வைத்து 78 ஆம் ஆண்டு அரசமைப்பை முன்னைய அரசு நடைமுறைப்படுத்தியது. தற்போது அந்த அரசமைப்பை இல்லாமற் செய்வதற்குப் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயகரீதியில் முற்போக்கான ஒரு செயலாகும்.

அரசமைப்பு நிறைவேற்றுக் குழு ஒன்றை அமைத்து உத்தேச அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதாக நீங்கள் அன்று கூறி இருந்தீர்கள். அதனைச் செய்யாமல் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னால் செல்வதன் அர்த்தம் என்ன?

இவ்வாறு விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவித்தார். (இ-5)

# விளையாட்டுஉத்தியோகத்தர் செய்முறைப் பரீட்சை

## 4 ஆம் திகதி இங்கு நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக். 31

விளையாட்டு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை நடைபெறவுள்ள இடம் மற்றும் நேரம் போன்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும்—

பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சார்த்திகளை ஆயத்தமாகுமாறும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார்.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோரும் இப்பரீட்சைக்குத் தோற்றக் கோரிக்கை விடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-ஐ)

## நாளை

**ஐப்பசி 15**

சனிக்கிழமை

திதி: பிரதமை பிற்பகல் 4.52 வரை.

நட்சத்திரம்: விசாகம் பின்இரவு 4.58 வரை.

ஸ்கந்த ஷஷ்டி விரதம் ஆரம்பம்

ஜபநேரம்: 3.03-4.33

[illegible] 09.03-10.33

(பகலுக்கும் இரவுக்கும் [illegible] நேரப்படி)

# 25 இலங்கைத் தமிழர்களை ரஷ்யா திருப்பி அனுப்பியது

மட்டக்களப்பு, ஒக். 31

சட்டவிரோதமாக ஜேர்மன் செல்ல முற்பட்ட 25 இலங்கைத் தமிழர்கள் ரஷ்யாவிலிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி கொழும்பிலிருந்து முகவரொருவரால் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இவர்கள், ரஷ்யாவிலிருந்து போலந்து ஊடாக ஜேர்மனிக்கு செல்வதற்கு இருந்தனர் என்றும்—

ரஷ்ய — போலந்து எல்லையில் வைத்து எல்லைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தனர் என்றும்-தெரிவிக்கப்பட்டது.

(இ.5-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு ஜூலை தொடக்கம் தபால் கூட்டுத்தாபனம் இயங்கும்

கொழும்பு, ஒக். 31

'அடுத்த வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் புதிய தபால் கூட்டுத்தாபனம் இயங்க ஆரம்பிக்கும்'

இவ்வாறு தபால் மா அதிபர் திருமதி எச். எம். எஸ். கொட்டகதெனிய தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்கு உலக வங்கி 180 கோடி ரூபாவை தந்துஉதவ இருப்பதாக அவர் தெரிவித்தார்,

இந்த நிதி நாட்டின் பின் தங்கிய பகுதிகளிலுள்ள தபால் சேவைகளை விருத்தி செய்வதற்கும்ஊழியர்களுக்கு கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் செலவிடப்படும் என்றும் அவர் கூறினார்.

தபால் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக மாற்றுவது தொடர்பாக பிரதம தபால் அலுவலகத்தில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர்களின் கூட்டத்தில்அவர் இவற்றைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிர்வாக மாற்றத்தால் எந்த ஊழியரும் வெளியேற்றப்படமாட்டார்கள். இதுபோன்று எந்தவொரு உபதபாலகமும் மூடப்படமாட்டாது. தபால் கட்டணங்களிலும் எதுவித மாற்றமும் ஏற்படாது.

ஊழியர்களின் சம்பளம் 20 சத வீதத்தினால் அதிகாரிக்கப்படுவதோடு லீவு எடுக்காமல் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு அதற்கான பணமும் வழங்கப்படும்.

உத்தேச தபால் கூட்டுத்தாபனத்தில் அரசியல் ரீதியாக எந்தவொரு நியமனமும் வழங்கப்படமாட்டது. தபால் ஊழியர்களுக்கு தொழிற் சங்க உரிமைகள் உறுதி செய்யப்படும். ஒழுங்காற்று சேவை தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து ஊழியர்கள் தொழிற் பிணக்கு நீதிமன்றங்களின் உதவியை நாடமுடியும். ஊழியர்களுக்கு புதிய காப்புறுதித் திட்டமும் ஆரம்பிக்கப்படும்.

இப்படி தபால் மா அதிபர் மேலும்தெரிவித்தார் (இ-5)

## இறுதிப் பரீட்சை பேராதனையில்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக கலைப் பிரிவு இறுதி ஆண்டு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே நடைபெற உள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள இப்பரீட்சைக்கு, யாழ்ப்பாண மாணவர்கள் தோற்றுவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கப் பட்டது. போக்குவரத்து மற்றும் பல வசதியீனங்களால் இம் மாணவர்கள் பெரிதும் பாதிப்புற வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ]

## பண்டாரவன்னியன் நினைவு நாள்

வவுனியா, ஒக். 31

பண்டாரவன்னியனின் 194 ஆவது நினைவு தினம் இன்று வவுனியா செயலக வளவில் அமைந்துள்ளபண்டாரவன்னியன் நினைவாலயத்தில் நடைபெறும்.

இன்று காலை 10 மணிக்கு வவுனியா அரச அதிபர் கே. கணேஷ், வவுனியா நகர சபைத் தலைவர் ஜி.லிங்கநாதன் ஆகியோர் பண்டாரவன்னியன் சிலைக்கு மலர்மாலை அணிவர். (இ-3)

# அடுத்த பொதுநலவாய மாநாடு தென்னாபிரிக்காவில் நடக்கும்

## அதற்கு முன் அங்கு அதிபர் தேர்தல்

பொது நலவாய நாடுகளின் அடுத்த உச்சி மாநாடு எதிர்வரும். 1999 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது.

பொது நலவாய நாடுகளின் நான்கு நாள் மாநாடு இங்களன்று எடின்பரோ நகரில் முடிவடைந்த போது அடுத்த மாநாடு நடைபெறும் இடம் குறித்து அறிவிக்கப்பட்டது.

அடுத்த மாநாடு தென்னாபிரிக்காவில் நடைபெற விருப்பதையிட்டு நான் பெருமைப் படுகின்றேன். ஆனால் அதைக்காணநான் அதிகாரத்தில் இருப்பேனோ தெரியவில்லை என்று தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா பலத்த சிரிப் பொலியின் மத்தியில் தெரிவித்தார்.

பொது நலவாய மாநாடு நடப்பதற்கு முன்பே 1999 இல் தென்னாபிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## லிபிய அதிபர் கடாபிக்கு மண்டேலா விருது வழங்கினார்

ஒருவார காலத்துக்குள் லிபியாவுக்கு இரண்டாவது தடவையாக விஜயம் மேற்கொண்ட தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தமது நாட்டின் உயர் சிறப்பு விருது ஒன்றை லிபிய அதிபர் கடாபிக்கு வழங்கினார்.

பெரும் எண்ணிக்கையானோர் திரண்டிருந்த வைபவம் ஒன்றில் மண்டேலாவுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சர்வதேச அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை நிலை நாட்ட ஐ. நா. சபையை ஒரு கருவியாகப் பயன்படுத்த உலகத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்று அங்கு உரையாற்றிய அதிபர் மண்டேலா வலியுறுத்தினார். (ஐ)

# துப்பாக்கிச் சூட்டை அடுத்து மக்கள் சிதறி ஓட்டம்

## சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி, ஒக். 31

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள காவலரண்களிலிருந்து திடீரென துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி சந்தையில் தீபாவளி உடுப்புகள் எடுக்க வந்தோரும் வியாபாரிகளும் நாலா புறமும் சிதறி ஓடினர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பலர் தமது சைக்கிள்களை அந்தந்த இடங்களில் விட்டு விட்டு வீடுகளுக்கு ஓடிச்சென்றனர்.

நேற்றுக் காலை வந்து எடுத்துச் சென்றனர்.

மழை பெய்து கொண்டிருந்தவேளையில் இடி முழக்கச் சத்தத்தையடுத்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-117)

### ஐ. தே. கவுடன்..

(முதலாம் பக்கத் தொடர்)

காணி, பொலீஸ், நிதி, அதிகாரப் பகிர்வின் அலகு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஐ. தே. கவுக்கும் அரசுக்கும் இடையில் இணக்கப்பாடு இன்னமும் காணப்படவில்லை.

இந்த விடயங்கள் குறித்து ஐ. தே. கவுடன் பேசவே தமிழ்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

### வெற்றி உறுதி...

[முதலாம் பக்கத் தொடர்]

துருப்புக்களைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரைப்பாதை ஒன்றைத் திறப்பதை நோக்கமாகக் கொண்டு மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமான வெற்றி உறுதி ராணுவ நடவடிக்கை ஏறகனவே இரு கட்டங்களை பூர்த்தி செய்திருப்பது தெரிந்ததே.

மூன்றாவதுகட்ட நடவடிக்கையின் போது படையினர் தமது இலக்கை அடைந்து விடுவார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன (இ-164-3)

### மாங்குளத்...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னேறி பெரியமடு, நயினாமடு பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினரே ஒட்டுசுட்டான் நோக்கி நகர முற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படையினருடனேயே புலிகள் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-3-164)

### அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

அறிக்கைகளை வெளியிடுவது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஏழு மாகாணங்களில் விசாரணைகளை நடத்திய மூன்று ஆணைக் குழுக்களின் தலைவர்களும் சமீபத்தில் ஜனாதிபதியிடம் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்து இருந்தனர். (இ-5)

### பேச்சுவார்த்...

[முதலாம் பக்கத் தொடர்]

வலியுறுத்துகின்றது.

அமெரிக்கா பயங்கரவா... எதிர்ப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தும் ஒரு முயற்... யாக இம்மாத முற்பகுதியி... விடுதலைப் புலிகள் இய... கத்தை ஒரு பயங்கரவா... அமைப்பாகப் பிரகடன... செய்தது.

விடுதலைப் புலிகள் த... நியாயமற்ற தாக்குதல்க... நிறுத்தி இனப்பிரச்சினை... பேச்சுவார்த்தை அ... படையிலான தீர்வுக்கு ... ரவு வழங்கவேண்டும் எ... அமெரிக்கா கோரியுள்ள...

இவ்வாறு அவர் மே... தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்... பரந்த அடிப்படையில... அரசியல் சீர்திருத்த ... னைகள் நாட்டின் அர... பிரச்சினைக்கு சமாதா... தீர்வு காண்பதற்கான ... யான அத்திவாரத்தை ... வாக்கும் என்றும் அவர் ... னார். (இ-...

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொட...

விதிக்கப்படும் எனவும் ... கலைக்கழக கவுன்சில் தீ... னம் எடுத்துள்ளது.

இத்தகவலை உபவே... பேராசிரியர் லெஸ்லி ... வர்த்தனா நேற்றுத் தெரி... தார்.

பொறியியல் பீடமாண... எஸ். வரப்பிரகாஷ் மர... தொடர்பாக பேராசிரி... ஒருவர் தலைமையில் நிய... கப்பட்டுள்ள விசாரணை... குழுவுக்கு உதவி வழங்க... மொழி தேர்ச்சி பெ... பேராசிரியரொருவரும் ... மிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்து... தொடர்புடைய எவரை... விசாரிக்கக் கூடிய அதிகா... இந்த விசாரணைக்குழுவு... பல்கலைக்கழக கவுன்... னால் வழங்கப்பட்டுள்ளது... (இ-21...


எமது புதிய வெளியீடு

G. சேகர், குஷ்பு

குடும்பச்சங்கிலி

CD வெளியீடு

அபிமன்யு

(Full Screen)

வீடியோவிமல்

யாழ்ப்பாணம்.

(50896)



மங்களகரமான திறப்புவிழா



நாளை மலரும் ஐப்பசித் திங்கள்
15 ஆம் திகதி (01-11-1997) சனிக்கிழமை
காலை 6.30 தொடக்கம் 8.30 வரையுள்ள
சுபவேளையில்

★ சிறி நதியா நகைமாடம் ★

ஸ்தாபன வாடிக்கையாளரின்
திரிசங்கு நிலையைப் போக்க
மற்றுமோர்

இணை நிறுவனமான

சிறி ரூபா நகைமாடம்

என்னும் ஸ்தாபனத்தை
ஆரம்பித்து வைத்து இருப்பதால்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

சிறி ரூபா நகைமாடம்
சிறி நதியா நகைமாடம்
உரிமையாளர்

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1928)



கண்ணீர் அஞ்சலி

எழுதுமட்டுவாழ் கிராம அலுவலர்

பொ. நவரத்தினராசா

அவர்களின் அன்பு மாமனார்

கந்தையா குலசேகரம்பிள்ளை J. P.

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கிராம அலுவலர்கள்

தென்மராட்சி பிரதேச செயலகம்

சாவகச்சேரி.

(சி. 1931)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org